**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.60/2024**
**வழக்கு சாட்சி PW-7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காளிதாஸ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | இராமசாமி | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | ஊத்துமலை | வயது | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 28th, 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஊத்துமலையில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 வெள்ளத்துரை என்பவரை எனக்கு தெரியும். எதிரியை எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 04.03.2023ம் தேதி, இரவு 10.15 மணிக்கு நானும், ஆனந்த் என்பவரும் எங்கள் ஊர் ஒயின் ஷாப் பக்கம் பேசிக்கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது, எதிரி முகேஷ் மகேந்திரனை அழைத்தார் என்றால் சரியல்ல. இராசாத்தி, வெள்ளத்துரை, மகேந்திரன் ஆகிய 3 பேரும் வெளியே வந்தபோது, முகேஷ் மகேந்திரனை பார்த்து அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. முகேஷ் சட்டைக்கு பின்னால் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து

மகேந்திரனின் கழுத்தை நோக்கி வெட்டும்போது, அந்த வெட்டு அவரது பின்புறத்தில் பட்டு இரத்தம் வந்தது என்றால் நான் நேரடியாக பார்க்கவில்லை. மகேந்திரன் மருத்துவமனைக்கு போனதாக கேள்விபட்டேன். நானும், அக்கம் பக்கம் உள்ளவர்கள் சத்தம் போடவும், எதிரி மகேந்திரனை பார்த்து கொலை மிரட்டல் செய்தார் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் நடைபெற்றது என்றும், சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.04 10:59:24 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.60/2024**
**வழக்கு சாட்சி PW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மதுபாலன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | இராமசாமி | தொழில் | : | தனியார் நிறுவன வேலை |
| கிராமம் | : | ஊத்துமலை | வயது | : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 28th, 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஊத்துமலையில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். 3 வருடங்களுக்கு முன்பு நான் வீட்டில் இருந்தபோது, போலீசார் காலை 09.00 மணிக்கு மகேந்திரன் வீட்டின் பக்கம் வந்து விசாரித்து படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். அந்த பார்வை மகஜரில் நான் கையெழுத்து செய்தேன். பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து போட்ட ஆவணத்தில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னுடன் வேறு யாரும் கையெழுத்து செய்யவில்லை. நான் போலீசார்

கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.04 10:59:31 +0530